DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 279/2022**

| Deposition of the | : | PW7 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்புச்செல்வி | Age | : | 52 |
| H/N | : | சாமிநாதன் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | குண்டுகரை முருகன் கோவில் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of June 2024.

**06.06.2024**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் குண்டுகரை முருகன் கோவில் தெருவில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் சிதம்பரனார் தெருவில் உள்ள ராஜா பள்ளி மைதானத்திற்கு அருகே உள்ள அரண்மனைக்கு சொந்தமான வீட்டில் கடந்த 40 வருடங்களாக வசித்து வருகிறேன். அந்த இடத்திற்கு வாடகையாக ரூ. 300/– கொடுத்து வந்தோம். அதன்பிறகு கடந்த 2014–ம் ஆண்டு வீடை பராமரிப்பு செய்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் எங்களை கேட்காமல் எப்படி பராமரிப்பு செய்யலாம் என்று பராமரிப்பு செய்வதை தடை செய்து விட்டார்கள்.

**2.** அதன் பிறகு வீட்டிற்கு வாடகையாக ரூ. 2500/– என்று கொடுக்கசொன்னார்கள். ஆஜர் எதிரிகள் மாத மாதம் என்னிடம் வந்து வாடகை தொகையை வசூல் செய்து செல்வார்கள். மேற்படி வாடகை பணத்தை அரண்மனைக்கு செலுத்தினார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் வந்து விசாரித்த போது தான் வாடகை பணத்தை ஆஜர் எதிரிகள் அரண்மனைக்கு செலுத்தாத விஷயம் எனக்கு தெரிய வந்தது. ஆஜர் எதிரிகளிடம் வாடகை தொகைக்கு ரசீது கேட்டால் பின்னர் தருகிறோம் என்று கூறுவார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எந்த வருடத்தில் இருந்து நான் எனது வீட்டிற்கு ரூ. 300/–யை வாடகையாக செலுத்தி வந்தேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சுமார் எத்தனை வருடங்கள் நான் ரூ. 300/–யை வாடகையாக செலுத்தினேன் என்றால் சுமார் 35 வருடங்களாக செலுத்தினேன். எந்த தேதியில் நான் 2014 ம் ஆண்டு வீட்டை பராமரிப்பு செய்தேன் என்றால் சரியாக தெரியாது. மேற்படி 35

வருடங்களாக ஆஜர் எதிரிகள் தான் வாடகையை வசூல் செய்ய வருவார்களா என்றால் ஆஜர் எதிரிகள் தான் வருவார்கள். ஆஜர் எதிரிகள் தான் வாடகையை வசூல் செய்ய அங்கிகரிக்கப்பட்ட நபர்கள் என்று நான் எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் அவர்கள் தான் ரசீதுகள் கொடுப்பார்கள் அதன் அடிப்படையில் தெரிந்துகொண்டேன்.

**2.** அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுப்பார்கள். அந்த ரசீதுகளில் யாருடைய கையெழுத்து இருக்கும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை ரசீது கொடுத்தார்கள் என்றாலும், எந்த வருடத்தில் இருந்து ரசீது கொடுக்கவில்லை என்றாலும் சரியாக ஞாபகம் இல்லை. நான் செலுத்திய வாடகை பணத்தை எதிரிகள் உரிய நபர்களிடம் செலுத்தினார்களா என்பதை பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1வது எதிரி ராஜாவின் பள்ளியில் என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இடத்தின் உரிமையாளர்களிடம் ஆஜர் எதிரிகள் தான் வாடகையை வசூல் செய்ய அங்கிகரிக்கப்பட்ட நபர்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனது கணவர் சொல்லி தெரிந்துகொண்டேன். 2014-ம் ஆண்டில் இருந்து தான் வாடகை தொகை ரூ. 2500/-ஆக உயர்த்தப்பட்டது.

**3.** 2வது எதிரியை எனக்கு சுமார் 30 வருடங்களாக தெரியும். என்னிடம் வாடகை வசூல் செய்ய வரும் சமயத்தில் இருந்து அவரை தெரியும். வாடகையை வசூல் செய்ய ஆஜர் எதிரிகள் சேர்ந்து வருவார்களா என்றால் சில சமயம் சேர்ந்து வருவார்கள் சில சமயம் ஒருவர் மட்டும் வருவார். எந்தெந்த மாதம் ஆஜர் எதிரிகள் சேர்ந்து வந்தார்கள் என்றால் அதை பற்றி ஞாபகம் இல்லை. 1வது எதிரி எந்தெந்த மாதத்தில் வாடகை தொகையை பெற்றார் என்பதை பற்றியும், 2வது எதிரி எந்தெந்த மாதத்தில் வாடகை தொகையை பெற்றார் என்பதை பற்றியும் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். 1மற்றும் 2வது எதிரிகள் என்னிடம் எவ்வளவு தொகைகள் பெற்றார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். என்னிடம் கடைசியாக யார் வாடகை தொகையை பெற்றது என்றால் 2வது எதிரி பெற்றார். எந்த தேதி என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது வீட்டை வீட்டின் உரிமையாளர்கள் பார்வையிட வருவார்கள் என்றால் வரமாட்டார்கள்.

**4.** அரண்மனைகாரர்கள் நிலத்தை பார்வையிட வருவார்களா என்றால் வரமாட்டார்கள். நான் சென்று அரண்மனை காரர்களை பார்ப்பேனா என்றால் பார்ப்பேன். அந்த சமயத்தில் அரண்மனை காரர்கள் நான் வாடகை செலுத்தவில்லை என்று கூறினார்களா என்றால் கூறினார்கள். ஆனால் எப்போது சொன்னார்கள் என்று சரியாக ஞாபகம் இல்லை. எனது கணவர் கடந்த 2014ம் ஆண்டு இறந்த பிறகு கூறினார்கள். போலீசார் சொன்ன பிறகு தான் எனது வாடகை தொகை உரிமையாளர்களிடம் செல்லவில்லை என்று தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள் தேதி சரியாக ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

போலீசாரிடம் ஆவணங்கள் ஏதேனும் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், மோசடிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறுவிசாரணை– இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW8 | Caste | : | |
| Name | : | நாகநாதன் | Age | : | 40 |
| F/N | : | சேகர் | Occupation | : | துப்புறவு பணியாளர் |
| Village | : | ஜஷ்டின் காலணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of June 2024.

**06.06.2024**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஜஷ்டின் காலணியில் குடியிருந்து கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் தற்காலிக துப்புறவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2017 ம் ஆண்டு ராஜா மேல்நிலைப்பள்ளியில் நான் எனது அம்மாவிற்கு உதவியாக துப்புறவு பணியாளராக பணி செய்தேன். அப்போது 1 வது எதிரி மேற்படி பள்ளியில் ஆய்வக உதவியாகராகவும், 2 வது எதிரி இரவு காவலராகவும் பணி செய்தார்கள். அந்த வகையில் ஆஜர் எதிரிகள் எனக்கு நன்கு பழக்கம். அதன்பிறகு 1 வது எதிரி தனக்கு பணம் வரவேண்டியுள்ளது என்றும் எனது வங்கி கணக்கில் போட்டு வரவு வைத்து எடுத்து தரும்படியும் கூறினார். அதன்பேரில் எனது கரூர் வைஸ்யா வங்கி கணக்கிற்கு 1 வது எதிரி கொடுக்கும் காசோலையை டெபாசிட் செய்து ரூ. 11000/-த்தை 1 வது எதிரியிடம் எடுத்துக்கொடுத்தேன். இது போன்று சுமார் 7, 8 முறை பணத்தை 1 வது எதிரியிடம் எடுத்துக்கொடுத்துள்ளேன். அதன்பிறகு போலீசார் விசாரிக்கும் போது மேற்படி பணம் ராஜாவின் பணம் என்று தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கின் சாட்சி பாக்கியம் எனது பெரியம்மா ஆவார். அவர் எந்த வருடத்தில் இருந்து ராஜாவின் பள்ளியில் பணிபுரிகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் ராஜாவின் பள்ளிக்கு துப்புறவு பணியாளராக பணிக்கு செல்லும் விவரம் ராஜாவின் குடும்பத்தாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பணி செய்ததற்கு ஊதியம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எவ்வளவு காலம் நான் எனது அம்மாவிற்கு உதவி செய்தேன் என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லாத போது உதவி செய்தேன். எந்தெந்த தேதியில் நான் எனது பெரியம்மாவுக்கு உதவி செய்தேன் என்று குறிப்பிட்டு

சொல்லமுடியுமா என்றால் முடியாது. 1வது எதிரியை எனக்கு கடந்த 5, 6 வருடங்களாக தெரியும். எந்த தேதியில், 1வது எதிரி கொடுத்த காசோலையை நான் வங்கில் செலுத்தினேன் என்றால் 2014–2016ம் ஆண்டு வரை செலுத்தினேன். தேதி, மாதம் சரியாக தெரியாது. 1வது எதிரி பணத்தை எடுத்துத்தரும்படி என்னிடம் கேட்டதை அ.சா.5த்திற்கு தெரிய படுத்தினேனா என்றால் தெரியப்படுத்தினேன்.

**2.** அ.சா. 5ம் உதவி செய்வதாக சொன்னார்களா என்றால் சொன்னார்கள். 1வது எதிரி உதவி கேட்டு இரண்டு நாட்கள் கழித்து தான் காசோலையை கொடுத்தார். காசோலையை 1வது எதிரிக்கு யார் கொடுத்தது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1வது எதிரி கொடுத்த காசோலையை நான் பார்க்கவில்லை. அவராகவே எனது வங்கி கணக்கில் செலுத்தி விடுவார். காசோலையை யார் எந்த தேதியில் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லி 1வது எதிரி மோசடி செய்த விவரத்தை தெரிந்து கொண்டேன். எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அதை பற்றி தெரியாது. என்னை போன்று வேறு நபர்களை 1வது எதிரி மோசடி செய்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு பணத்தை 1வது எதிரி மோசடி செய்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் 1வது எதிரிக்கு எதிராக போலீசாரிடமோ, அரண்மனைகாரர்களிடமோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தேதி சரியாக ஞாபகம் இல்லை. போலீசாரிடம் எனது வங்கி கணக்கு பரிவர்த்தனையை சமர்ப்பிக்கவில்லை. எதிரிக்கும், மோசடிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் புகார் தாரர் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**<u>மறுவிசாரணை– இல்லை</u>**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**